සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment


මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/14/SS/2/VII/3/2024

ඔබේ අංකය / உமது இல / Your No: ........................................

දිනය / திகதி / Date: 2021.11.06

**சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கை (சமூக பாதுகாப்பு) இலக்கம் - 2024/12**

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
மாவட்ட பிரதிப் பணிப்பாளர்கள்/உதவி பணிப்பாளர்கள்,
சகல மாவட்ட விடயப்பொறுப்பு முகாமையாளர்கள்,
சகல மாவட்ட விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி, வங்கிச் சங்க முகாமையாளர்கள்,
சகல தலைமைப்பீட முகாமையாளர்கள்,
சகல கணக்காய்வு உத்தியோகத்தர்கள்,
சகல விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு.

**சமுர்த்தி சமூக அபிவிருத்தி நிதிய "சமுர்த்தி புலமைப்பரிசில்" வேலை திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் - 2024/2016 கல்வி ஆண்டு.**

**அறிமுகம்**

2024/2026 கல்வியாண்டிற்குறியதாக சமுர்த்தி சிப்தொர புலமைப் பரிசு வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்புச் சபை அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் இவ்வாண்டிற்குறிய கல்விப் பொது தராதர உயர்தர வகுப்புகள் 2024 ஜூன் மாதத்தில் தற்காலிகமாக ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இந்த கல்வி ஆண்டுக்குரியதான மாணவர்களின் பொருட்டு புலமை பரிசுகளை வழங்குவது 2024 ஜூலை மாதத்திலிருந்து அது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் கல்வி ஆண்டுக்குரியதாக 2024 மே மாத கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் தோன்றி பரீட்சையில் தேறியுள்ள மற்றும் சுற்றறிக்கையில் இதனகத்து காட்டப்படுகின்ற 03ஆம் பந்தியின் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் இதில் உள்ளடக்கப்படுவர்.
மேலும் DSD/HO/14/SS/2/VIII/3/2023என்ற இலக்கமும் 2024.03.04ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 2022/2024 மற்றும் 2023/2025 கல்வி ஆண்டுகளின் பொருட்டு தற்போதும் சமுர்த்தி புலமைப் பரிசில் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**02. வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் குறிக்கோள்கள்.**

2.1) 2023.06.30 ஆம் திகதியில் சமுர்த்தி நிவாரணம் உரித்துடையதாக இருந்து அஸ்வெசும நன்மைகள் திட்டத்திற்கு தெரிவு செய்யப்படாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பாடசாலை செல்லும் வயதையுடைய பிள்ளைகளை பாடசாலைக் கல்வியிலிருந்து விலகுவதனை தவிர்ப்பது.




1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்) / Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director (Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

2.2) அக்குடும்பங்களின் திறமையும் தேர்ச்சியும் உள்ள சிறுவர்களது எதிர்கால கற்கை நடவடிக்கைகளை பாதுகாப்பதும், உயர் கல்விக்கான வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை விரிவு படுத்துவதற்கு ஒத்துழைத்தலும்.

2.3) இக் குடும்பங்களின் சிறுவர்களின் பொருட்டு சிறந்த சமூக பொருளாதார சூழ்நிலையினைக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதனூடாக சமூகத்திற்கு பயனுள்ள பிரஜைகளை நாட்டிற்காக அர்ப்பணிப்புச் செய்வதற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்தலும்

2.4) ஒட்டு மொத்த தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டில் மனித மூலதனத்தினை விரிவுபடுத்துதல்.

**03. சிப்தொர புலமைப் பரிசினை விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகள்.**

3.1) 2023.06.30ம் திகதியில் சமுர்த்தி நிவாரணம் உரித்துடையதாக இருந்து தற்போது அஸ்வெசும நன்மைகள் திட்டத்தில் தெரிவு செய்யப்படாத குறைந்த வருமானம் பெரும் குடும்பம் ஒன்றின் பிள்ளை ஒன்றாக இருத்தல்.

3.2) 2023(2024) கல்வி ஆண்டிற்குறிய க.பொ.த.(சா.தர) பரீட்சையில் தோற்றி,பரீட்சையில் தேறி 2024/2025 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.தர)கற்கும் மாணவர் ஒருவர் என்பதனை பாடசாலை அதிபரின் உறுதிப் பாட்டினை பெற்றுக் கொள்ளல்.

3.3) குறித்த பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கின்ற ஒருவராக இருத்தல்.

3.4) தனது கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு சொந்தமான சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் சமுர்த்தி சிசுரக்க கணக்கு ஒன்றினை கொண்ட ஒருவராக இருத்தல்.

3.5) அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற புலமை பரிசு வேலை திட்டங்கள் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற புலமைப் பரிசில் வேலைத் திட்டத்தின் கீழ் நன்மைகளை பெறாத ஒரு மாணவராக இருத்தல்.

**04. புலமைப் பரிசு நிராகரிக்கப்படல்**

4.1) புலமைப் பரிசினைப் பெறுபவர் பாடசாலைக் கல்வியிலிருந்து விலகுதல்

4.2) புலமைப் பரிசைப் பெறுபவர் திருமணம் செய்தல்

4.3) புலமைப் பரிசைப் பெறுபவர் மரணமடைதல்

4.4) தனது குடும்பத்திற்கு அஸ்வெசும நிவாரணம் கிடைப்பது.

**05. பலமைப் பரிசிலைப் பெறுவோலை விளக்கமளித்தல், விண்ணப்படிவங்களை பொறுப்பேற்றல் மற்றும் தாமதமாக கிடைக்கும் விண்ணப்பபடிவங்கள் தொடர்பில் செயற்பட வேண்டிய விதம்.**

**5.1) புலமைப் பரிசில் பெறுவோரை விளக்கமளித்தல்**

இச் சிப்தொர புலமைப் பரிசில் வேலைத்திட்டம் தொடர்பில் குறித்த பிரிவில் வதியும் மேற்படி தகுதிகளையுடைய சகல நிவாரணப்பெறும் பயனாளிகளின் பிள்ளகளை விளக்கமளித்தல் வேண்டும். அங்கு அறிவிப்புக்கள், கூட்டங்கள் போன்றவைகள் ஊடாக விளக்கமளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் முகாமையாளரின் நேரடிப் பொறுப்பாகவுள்ளது. தலைமைக் காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகளுக்கமைய, நன்மைகள் கிடைக்கப்பெற வேண்டியவர்கள் விளக்கமளிக்கப்படவில்லை என்ற விடயம் தெளிவாகியுள்ளமையினால் இது தொடர்பில் விஷேட கவனத்தினைச் செலுத்துவது மாவட்டப் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

5.2 விண்ணப்படிவங்களை பொறுப்பேற்றல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்படிவங்களை தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொளள் வேண்டிய விதம்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 01ம் இலக்கப் படிவத்தின் பிரகாரம் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒன்றினை விண்ணப்பதாரியால் முறையான பிரகாரம் பூர்த்தி செய்து பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி

உத்தியோகத்தரிடம் ஒப்படைத்தல் வேண்டும். குறித்த சிபாரிசுடன் 2024/11/25ம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி தலைமையக முகாமையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் சந்தர்ப்பத்திலேயே ''சிசுரக்க'' கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விண்ணப்பப்பதாரிகளை விளக்கமளித்தல் வேண்டும். சமுதாய அடிப்படை வங்கி சுற்றறிக்கை மூலம் இற்குறியதாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.
2024/2026 கல்வியாண்டிற்குறியதாக க.பொ.த (உ/தர) கற்கை நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதனால் சிப்தொர புலமைப்பரிசில் தவணைப பணத்தினை செலுத்தும் பொருட்டு கல்வியாண்டிற்குறியாக விண்ணப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதியானது 2025/11/25ம் திகதியாகும்.

வேலைத்திட்டத்தின் ஆரம்பத்திலேயெ பிரிவில் உரிமைகள் கிடைக்கப்பெற்ற புலமைப்பரிசிலின் அளவினை பிழைகளின்றி கணக்கீடு செய்வது குறித்த பிரிவு பொறுப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும் என்பதுடன் பின்னர் இனங்காணப்படுகின்ற புலமைப்பரிசில்களுக்குறிய நன்மைகளை வழங்க முடியாமல் போகும். அத்துடன் இந்த புலமைப்ப பரிசில் வேலைத்திட்டத்தில் அல்லது குறித்த கொடுப்பனவுக் காலத்திற்குள் புலமைப்பரிசிலை செலுத்தாமல் உள்ள சந்தர்ப்பங்கள் வெளிக்காட்டப்பட்டால் குறித்த பிரிவில் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அதற்கு நேரடியான பொறுப்புக் கூறல் வேண்டும். அதன் பிரகாரம் கண்காணிப்பு மட்டத்தின் உத்தியோகத்தர்களும் இது தொடர்பில் பொறுப்பக்கூறல் வேண்டியேற்படும்.

**06. புலமைப் பரிசில் கொடுப்பவினை செலுத்துதல்**

6.1. 2024/2026 கல்வியாண்டிற்குறியதாக 2024 ஜுலை மாதத்திலிருந்து 02 வருடங்களுக்குக் (உச்சபட்சம் 24 மாதங்கள்) மாதம் ஒன்றுக்கு ரூபா 1500/= வீதம் புலமைப் பரிசில் நன்மையினை வழங்குதல் வேண்டும்.

6.2 மாணவர்கள் உயர் தரத்தில் கல்வி கற்பதாக பாடசாலை அதிபரின் சிபாரிசினை மாதாந்தம் பெற்றுக் கொள்ளும் போது ஏதேனும் சிரமங்கள் இருந்தால் மாத்திரம், குறித்த மாணவர்/மாணவி பாடசாலை செல்வதனை பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசினை பெற்றுக் கொள்ள முடியும். இருப்பினும் 06 மாதத்திற்கொருமுறை கட்டாயமாக குறித்த மாணவர் அப்பாடசாலையில் கல்வி கற்பதனை அப்பாடசாலை அதிபரின் உறுதிப்பாட்டினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

6.3 தொற்று நோய் போன்ற விசேடமான சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு நடவடிக்கைகளை குறிப்பிட்ட பிரகாரம் மேற்கொள்ள முடியாததாக உள்ள சந்தர்ப்பத்தில் புலமைப் பரிசிலைப் பெறுபவர் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவது உறுதிப்படுத்துவதாயின் பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், வலய முகாமையாளர் மற்றும் தலைமையக முகாமையாளரின் சிபாரிசின் பிரகாரம் பாடசாலைகள் உரிய பிரகாரம் ஆரம்பிக்கப்படும் வரை கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும்.

6.4 புலமைப் பரிசிலை பெறும் ஒருவர் உள்ள நிவாரணம் பெறும் குடும்பம் ஒன்று வசிப்பிடத்தினை மாற்றும் போது வதிவிடம் மாறியதனை கிராம உத்தியோகத்தரின் உறுதிப்பாட்டுடன் தனது வங்கியின் சிசுரக்க கணக்கினை உடைய புலமைப் பரிசில் பயனாளி என்பதனை உறுதிப்படுத்தியன் பின்னர் சுற்றறிக்கை ஆலொசனைகளின் பிரகாரம் புலமைப் பரிசிலைப் பெறுவோருக்கு கொடுப்பனவுளை மேற்கொள்ள முடியும்.

6.5. புலமைப் பரிசிலை வழங்கும்போது புலமைப்பரிசிலைப் பெறுபவரிடமிருந்து தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் புலமைப்பரிசில் தொகையினை கணக்கில் வரவிடல் வேண்டும்.

**7.நிவாரணம் பெறுவோரின் பெயர் பட்டியல் உள்ளடங்கிய பொழிப்பறிக்கையுடன் நிதி ஒதுக்கீட்டினைக் கோருதல்.**

7.1) அதன் பிரகாரம் புலமைப் பரிசில் பெறும் விண்ணப்பதாரிகள் இணைப்பு 01இன் பிரகாரம் பூர்த்தி செய்த விண்ணப்ப படிவத்தின் தகவல்களை பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தரின் கையொப்பத்துடன் சமுர்த்தி வங்கி வலய முகாமையாளருக்கு சமர்ப்பித்து கையொப்பம் மற்றும் உத்தியோக இலச்சினையுடன் விண்ணப்ப படிவங்களை பிரதேச செயலக தலைமைப் பீட முகாமையாளருக்கு பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தின் பொருட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

7.2) இணைப்பு 02 மூலம் வலய மட்டத்தில் இத்தகவல்களை சாராம்சப்படுத்தி வைத்துக்கொள்வது வலயப் பொறுப்பு முகாமையாளரின் கடமையாகும்.

7.3) பின்னர் இவ்வாறு வலய மட்டத்தில் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற பொழிப்பறிக்கையினை இணைப்பு 03 இன் பிரகாரம் தலைமைப் பீட முகாமையாளரால் பிரதேச செயலக மட்டத்தில் சாராம்சப்படுத்தப்பட வேண்டியதுடன் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தின் பின்னர் 2024.11.25ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலகங்களுக்கு உரிய தகவல்களை வழங்கும் பொருட்டு பிரதேச மட்டத்தில் நேர முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்கு குறித்த உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும். பின்னர் பிரதேச மட்ட பொழிப்புத் தகவல்களிலிருந்து இணைப்பு 04இன் பிரகாரம் மாவட்ட மட்டத்தில் தயாரித்துக்கொண்டு கொடுப்பனவின் பொருட்டு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் 2024 .12.0 5ஆம் திகதி தலைமை

காரியாலயத்தின் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரிப் பிரிவின் மின்னஞ்சல் முகவரியான ssfsamurdhi@yahoo.com இற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்
அதன் பிரகாரம் குறித்த தவணைத் தொகையினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**08. கொடுப்பனவுகளை கணக்குகளில் பதியப்பட வேண்டிய விதம்.**

8.1) சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் "புலமைப் பரிசிலைப்" பெறுபவரின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட சிசுரக்க கணக்கில் புலமைப்பரிசு தவணைத் தொகையினை வைப்பிலிடல் வேண்டும்.

8.2) புலமைப் பரிசுத்தொகையினை வங்கிக் கணக்கில் வைப்பிலிட்ட உடனேயே புலமைப்பரிசிலைப் பெறுவோரை விளக்கமளிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

8.3) புலமைப் பரிசுத் தொகையினை வங்கியிலிடுகின்ற சந்தர்ப்பத்திலேயே குறித்த புலமைப்பரிசிலை பெறுபவரின் உரித்துப் படிவத்தில் பணம் செலுத்திய தினத்தினை பிழைகள் இன்றி பதிவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். நிதியத்தின் செலவுகளை குறைத்துக் கொள்ளும் பொருட்டு உரித்து படிவம் அச்சிட்டு வழங்கப்பட மாட்டாது என்பதனால் உரித்து படிவத்தின் போட்டோ பிரதியினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது.

8.4) மேலும் தற்போது சமூக பாதுகாப்பு நன்மைகள் ONLINE திட்டத்தின் ஊடாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளபடமாட்டாது என்பதனால் சகல கொடுப்பனவுகனைளயும் மேற்படி முறையினூடாகவே நடைபெறும்.
மேலே தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களினது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை உயர்த்துவதற்காக நடைமுறைப்படுத்துகின்ற இந்த சிப்தொர புலமைப் பரிசில் வேலைத்திட்டத்தின் வெற்றியின் பொருட்டு தாங்கள் உட்பட பணியாளர்கள் குழாம் வழஙகும் ஒத்துழைப்பினை போற்றி மதிக்கின்றேன்.

சீ.டீ. களுஆரச்சி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர் -புத்தசாசனம், சமய, கலாசார அலுவல்கள் தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
2. செயலாளர், கல்வி அமைச்சு - த.கூ.க. பொருட்டு
   (புலமைப் பரிசில் பெறுவோர்களின் பெயர்ப்பட்டிலை பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்)
3. பிரதம கணக்காளர் - மாவட்டச் செயலகம் -த.கூ.க.பொருட்டும் உ.ந பொருட்டும்.
4. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - அ.கொ.பொருட்டு
5. சகல பிரிவுத் தலைவர்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டும் உ.ந பொருட்டும்.

TRANSLATED BY – M.M.M. JAWHAR (Translator)